**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 284/2017**

PW2 –சாரங்கபாணி த/பெ முத்துகிருஷ்ணன்
நாள்–01.12.2023

**<u>குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

தாவா சொத்து சம்பந்தமாக 1-ம் வாதி பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை என்றால் பார்த்துள்ளேன். 1-ம் வாதி பெயரில் பத்திரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். என் வீட்டின் புல எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேலவாய்க்காலுக்கு வடக்கில் தான் நான் சாகுபடி செய்யும் நிலம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் அளவீடு செய்தது சம்பந்தமாக நான் எவ்வித ஆவணமும் பார்த்ததில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பட்டா நிலமும், கோயில் நிலமும் சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான். பிள்ளையார் கோயில் நஞ்சைக்கும், ஜெயராமன் ஆசாரி சாகுபடி நஞ்சைக்கும் மேற்கு, புருஷோத்தமன் பெருமாள் நஞ்சைக்கும், செல்வராஜ் சாகுபடி நஞ்சைக்கும் வடக்கு, வரதராஜபெருமாள் நஞ்சைக்கும், செல்வராஜ் சாகுபடி நஞ்சைக்கும் கிழக்கும், மேலவாய்க்கால் வடிகண்ணிக்கு தெற்கு இந்த நான்கெல்லைக்குட்பட்ட நிலத்தை தான் பிரதிவாதி சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 1-ம் வாதி சாகுபடி செய்து வருகிறார்.

1-ம் வாதி வழக்குரையில் தான் சாகுபடி செய்து வரும் நான்கெல்லையை குறிப்பிட்டுள்ளாரா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தில் 1-ம் வாதி என்ன பயிர் செய்துள்ளார் என்றால் கோ 45 நெல் பயிர் செய்துள்ளார். 1-ம் வா தி தாவா சொத்தில் ஆடுதுறை 51 ரக நெல் பயிர் தான் பயிர் செய்துள்ளார் என்றும், நான் வழக்கிற்காக கோ 45 நெல் பயிர் செய்துள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சாகுபடி செய்து வரும் நிலத்திற்கு இது

நாள் வரையில் குத்தகை செலுத்தி ரசீது பெற்று வருகிறேன் என்றால் சரிதான். 1-ம் வாதி தாவா சொத்திற்கு குத்தகை செலுத்தியதற்கான ரசீது ஏதேனும் என்னிடம் காண்பித்துள்ளாரா என்றால் இல்லை. ஆனால் குத்தகை அளந்தால் கோயிலார் ரசீது கொடுத்துவிடுகிறார்கள் என்றால் சரிதான். நான் எவ்வளவு கோயில் நிலத்தை சாகுபடி செய்துவருகிறேன் என்றால் 3 ஏக்கர் நிலத்தை சாகுபடி செய்கிறேன்.

நான் சாகுபடி செய்து வரும் அந்த 3 ஏக்கரும் ஒரே தாக்காக தான் உள்ளது. நான் சாகுபடி செய்து வரும் நிலத்திற்கு வடக்கில் கேசவன் நிலமும், தெற்கே வடிவாய்க்காலும், மேற்கே அசோகன் நிலமும், கிழக்கே ராமதாஸ் நிலமும் உள்ளது. பிரதிவாதி சாகுபடி செய்துவரும் பட்டா நிலம் மற்றும் கோயில் நிலத்திற்கு கிழக்கில் லிங்கேஸ்வரன் சாகுபடி செய்து வரும் நிலம் உள்ளது என்றால் சரிதான். நான் 1-ம் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை